**Kanton Schaffhausen**
**Kantonsärztlicher Dienst**

Mühlentalstrasse 105
CH-8200 Schaffhausen

www.sh.ch

sh.ch

மாநில மருத்துவ சேவை

ஆரம்ப பள்ளிகளில் உள்ள
மாணவர்களின் பெற்றோருக்கு

சவ்ஹவுசன், 7. ஆனி 2021

**ஆரம்ப பள்ளிகளில் தொடர் பரிசோதனைகள்**

அன்பான பெற்றோர் மற்றும் சட்டபூர்வ பாதுகாவலர்களே

இரண்டாம் நிலை தரங்கள் I மற்றும் II இல் வசந்தகால விடுமுறையின் பின் சேர்க்கப்பட்ட உமிழ்நீர் மாதிரிகளை பயன்படுத்தி தொடர் பரிசோதனைகள் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த தொடர் பரிசோதனைகள் கடந்த இரண்டு வாரங்களில் முன்னோடித்திட்டத்தின் ஒரு பகுதியாக இப்போது ஆரம்ப பள்ளியிலும் அத்துடன் Dörflingen மழலையர் பள்ளியிலும் பயன்படுத்தப்பட்டன. இதில் செயல்முறைகள் சரிபார்க்கப்பட்டு மற்றும் கீழ் மற்றும் நடுத்தர நிலைகளில் தேவைகளுக்கேற்ப சரிபார்க்கப்பட்டு மாற்றப்பட முடியும். இளம் பள்ளிக் குழந்தைகளுக்கும் தொடர்பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்பதையும் மற்றும் முயற்சி பள்ளிக்கு நிர்வகிக்கக்கூடியது என்பதையும் முன்னோடித்திட்டம் காட்டுகிறது.

அரசாங்க சபை - வழக்கு எண்ணிக்கைகள் வீழ்ச்சியடைந்த போதிலும் - நேர்மறை அனுபவங்கள் மற்றும் பள்ளிகளில் பரவல்களுக்கான சாத்தியங்கள் போன்ற காரணங்களால் ஆரம்ப பள்ளிகள் தொடர் பரிசோதனைகளை செயற்படுத்த நிர்வாக மற்றும் நிறுவனரீதியாக தம்மை தயார்படுத்திக்கொள்வது சார்பாக பேசியுள்ளது. இதன்பின்னர் நிலைமை பொதுவாக மோசமடையும்போது நிர்வாக மற்றும் நிறுவனரீதியாக தயாராக இருப்பதால் அனைத்து ஆரம்ப பள்ளிகளிலும் தொடர்பரிசோதனையை விரைந்து பிரயோகிப்பது மாநிலத்திற்கு சாத்தியமாக உள்ளது. பள்ளிக்கட்டடத்தில் பல வழக்குகள் ஏற்பட்டால், இந்த பரிசோதனைகள் மாநில மருத்துவ சேவையின் தற்போதுவரையுள்ள மற்றும் மதிப்பிடும் பரவல் மேலாண்மைக்கான ஒரு கூடுதல் கருவியாக பள்ளியில் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கு செயற்படுத்தப்பட முடியும். ஒரு நேர்மறையான வழக்கு ஏற்படுவதற்கு முன்னர் பள்ளி அதிகாரிகள் தங்கள் ஆரம்ப பள்ளிகளில் முன்னெச்சரிக்கையாக  தொடர் பரிசோதனைகளை செயற்படுத்த மாநில மருத்துவ சேவையில் விண்ணப்பிப்பது சாத்தியமாயுள்ளது.

தொடர் பரிசோதனையில் மாணவர்கள் வாரம் ஒருமுறை வகுப்பறையில் உமிழ்நீர் மாதிரிகளைக் கொடுக்கிறார்கள் (மூக்கு-தொண்டை-சளி மாதிரி இல்லை). உமிழ்நீர் மாதிரிகள் தளத்தில் பொறுப்பான நபர் மூலம் ஒரு கலப்பு மாதிரியாக (அதிகபட்சம் 10 மாதிரிகளைக் கொண்ட பூல் என அழைக்கப்படுகிறது) இணைக்கப்படுகின்றன. பூலின் முடிவு எதிர்மறையானதாக இருந்தால்,எந்த நபர்கள் உண்மையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை கண்டறிய தனிப்பட்ட பரிசோதனைகள் பின்னர் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்காக நேர்மறை பூலில் இருந்து மாணவர்கள் தம்மை ஒரு தனிப்பட்ட பி.சி.ஆர்.- பரிசோதனைக்கு ( பொலிமரேஸ் சங்கிலி எதிர்வினை ) உட்படுத்துமாறு

கேட்டுக்கொள்ளப்படுவார்கள். 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு இந்த பரிசோதனை எப்போதும் ஒரு உமிழ்நீர் மாதிரியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது,இதில் பிள்ளைகள் குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்பிருந்தே குடிக்கவோ சாப்பிடவோ அனுமதிக்கப்படுவதில்லை. 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் அவர்கள் ஒரு உமிழ்நீர் மாதிரி அல்லது ஒரு மூக்கு-தொண்டை-சளி மாதிரியை பயன்படுத்தி பரிசோதிக்கப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்கலாம். அதன்பின் இரண்டு நிகழ்வுகளிலும் ஆய்வகப் பகுப்பாய்வு பி.சி.ஆர். - முறையை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது.

பூல் நேர்மறையாக இருந்தாலும் வகுப்பறையில் பாடங்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. இருப்பினும் வகுப்பு முடிந்தவரை மற்ற வகுப்புகளில் இருந்து தனிமைப்படுத்தப்படுகிறது. 4.ஆம் வகுப்பிலிருந்து மாணவர்கள் முடிவுகள் கிடைக்கும் வரை ஒரு பாதுகாப்பு முகக்கவசத்தை அணிகிறார்கள். செயல்முறை முடிந்தவுடன், வழக்கமாக 48 மணி நேரம் ஆகும், சாதாரண பாடத்திற்கு திரும்பலாம். தொடர் பரிசோதனைகளிலோ அதன் பின்னான பி.சி.ஆர். பரிசோதனையிலோ பங்கேற்காத மாணவர்கள் இதனால் ஒரு எதிர்மறையான அல்லது நேர்மறையான பரிசோதனை முடிவுகளை வழங்கமுடியாததால் தம்மை தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். எதிர்மறையான பி.சி.ஆர். பரிசோதனையின் மூலம் இந்த தனிமைப்படுத்தலை உடனடி விளைவுடன் நீக்கலாம், இதில் மாணவர்களுக்கான இதுபோன்ற பரிசோதனையை பெற்றோரே சுயமாக முயற்சிக்க வேண்டும்.

www.sh.ch/corona இணையத்தளத்தில் «Alles rund ums Testen» ( எல்லாம் பரிசோதித்தல் தொடர்பானது ) எனும் தலைப்பின் கீழ் தொடர் பரிசோதனைகள் குறித்த மேலதிக தகவல்களையும் ஆவணங்களையும் நீங்கள் காண்பீர்கள். மாணவர்களுக்கு வகுப்பில் செயல்முறை குறித்து விரிவாக தெரிவிக்கப்படும். மேலும் உங்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க பள்ளி நிர்வாகம் விருப்பத்துடன் உள்ளது.

தொடர் பரிசோதனைகளை செயல்படுத்துவதில் உங்கள் பிள்ளை பங்கேற்க உங்கள் ஒப்புதலை எங்களுக்கு வழங்கினால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்,மற்றும் இது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடனான ஒற்றுமையைக் காட்டும். இணைக்கப்பட்ட படிவத்தை நிரப்புங்கள் மற்றும் அதை நீங்கள் வெள்ளிக்கிழமை, 11. ஆனி 2021 அன்று உங்கள் பிள்ளையிடம் பள்ளிக்கு கொடுத்து விடுங்கள்.
உங்கள் ஆதரவிற்கு நன்றி !

அன்புடன்

Dr. med. Elke Lenz-Agnes
பிரதி மாநில மருத்துவர்